1993 பிப்ரவரி 8]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு உறுப்பினர்கள் கேள்விகள் கேட்கலாம். அதற்குரிய அமைச்சர்கள் பதில்தான் தருவார்கள். உறுப்பினர்களுக்கு உறுப்பினர்களே பதில் சொல்வது என்பது சரி வராது.

திரு. டி. எம். ரங்கராஜன், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஓர் உறுப்பினர் இங்கே கேள்வி எழுப்ப அனுமதிக்கப்பட்டு, எழுப்பிய பிரச்சினையின் மீது ** என்று கேட்பது சரியல்ல. அது முரணாக இருக்கிறது. அது அவைக் குறிப்பில் வேண்டாம்; அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

முற்பகல் 10.10

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 4, திருமதி ரெ. சியாமளா, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

4—

கோவில்பட்டியில் பெண்களுக்கென தனிக்கல்லூரி அமைத்தல்

*10317—திருமதி ரெ. சியாமளா: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவில்பட்டியில் பெண்களுக்கு தனிக்கல்லூரி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கப்படும் ?

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திருமதி ரெ. சியாமளா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இல்லையென்று சுருக்கமாகக் கூறி விட்டார்கள். சிதம்பரனார் மாவட்டத்தில்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

தூத்துக்குடியில் மட்டும்தான் பெண்களுக்கென்று தனியாக ஒரு கல்லூரி உள்ளது. தூத்துக்குடிக்கு அடுத்தப்படியாக ஓட்டப்பிடாரம்—அதற்கு அருகிலுள்ள மிகப்பெரிய நகரம் கோவில்பட்டிதான். ஓட்டப்பிடாரம், விளாத்திகுளம், கோவில்பட்டி ஆகிய தாலுக்காக்களில் உள்ள பல்லாயிரக் கணக்கான பெண்கள் அடுத்த மாவட்டங்களான காமராசர் மாவட்டம், நெல்லை-கட்டபொம்மன் மாவட்டத்திலுள்ள கல்லூரிகளுக்குத்தான் செல்ல வேண்டியுள்ளது. எனவே, தாயுள்ளம் கொண்ட எங்களுடைய மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு கருணையுடன் மறுபரிசீலனை செய்து கோவில்பட்டியில் பெண்களுக்கென்று தனியாக ஒரு கல்லூரி அமைக்க ஆவன செய்வாரா என்று அமைச்சர் அவர்களிடமிருந்து பணிவுடன் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவில்பட்டியில் மட்டுமல்ல, வேறு எங்கேயும் இப்போது புதியதாக கல்லூரி தொடங்குவதில்லை என்று அரசு இருக்கிற காரணத்தால் கோவில்பட்டியில் கல்லூரி தொடங்கப்பட மாட்டாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 5, திரு. எம்.எம்.எஸ். அபுல்ஹசன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

5—

மதுரை வக்ப் கல்லூரியில் பி.எட். ஆசிரியர் பட்டப்படிப்பு துவக்குதல்

*11828—திரு. எம்.எம்.எஸ். அபுல்ஹசன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரையில் வக்ப் கல்லூரியில் B.Ed பட்டப் படிப்பு துவக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ஏற்படுத்தப்படும்?

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இவ்வாறான கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.